Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.150/2019

**Depositions of PW- 3**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.ராதாகிருஷ்ணன் | Occupation | கூலி வேலை |
| Father's name | லட்சுமணன் | Calling | |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of August 2026.

10.08.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 2018 ம் வருடம் காலை 08.00 மணியளவில் செங்குளம் கண்மாய் அருகே உள்ள கபடி கிரவுண்டில் திருட்டு வழக்கு சம்மந்தமாக போலீசார் எங்களை விசாரித்துவிட்டு படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்ததில் நானும் சின்னாண்டி என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். **பார்வை மகஜர் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

மேற்படி பார்வை மகஜரில் என்ன எழுதப்பட்டது என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி கையெழுத்தை நான் காவல்நிலையத்தில் வைத்துதான் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.